முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து (குறுக்கீடு) இன்னும் பதில் வரவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் வந்திருந்தால் அவர்கள் சொல்வார்கள், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) திருவள்ளூர் தொகுதி, கனகவல்லிபுரம், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், நிகழ்ச்சி நிரலில் இருப்பதை அப்படியே படியுங்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், கனகவல்லிபுரம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், நீங்கள் திருவள்ளூர் தொகுதி, கனகவல்லிபுரம் என்று படியுங்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் படிக்கிறேன். திருவள்ளூர் தொகுதியில் கனகவல்லிபுரம் எங்கே இருக்கிறது என்று உங்களுக்குச் சொல்ல வேண்டும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியாது, நிகழ்ச்சி நிரலில் இருப்பதை அப்படியே படியுங்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதி, கனகவல்லிபுரத்தில் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட கனகவல்லிபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குத் தற்போது ராமஞ்சேரி 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு புதியதாக கனகவல்லிபுரம் கிராமத்தில் 2016–2017 Master Plan திட்டத்தின்கீழ் புதிய 230/110/33 துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டது. [நில விஸ்தீர்ணம்–6.02.5 ஹெக்டேர், சர்வே எண்–262, 263/2, 264 மற்றும் 265 வருவாய் கிராமம்–கனகவல்லிபுரம் கிராமம், திருவள்ளூர் தாலுகா (மேய்க்கால் புறம்போக்கு)] தேர்வு செய்யப்பட்ட நிலத்திற்குண்டான அரசாணை பிறப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களிடமிருந்து நில நிருவாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு 29–4–2017 அன்று கருத்துரு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. அரசாணை கிடைக்கப் பெற்றவுடன் இந்த நிதியாண்டிலேயே

230 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன், அவ்வளவு திருப்திகரமாக இல்லை. கனகவல்லிபுரத்தில் குறைந்த மின்னழுத்தம் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனத்தில் கொண்டு, உடனடியாக அதைச் சரிசெய்ய 230 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை நாளை காலையே ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார் என்று நினைக்கிறேன். துணை மின் நிலையம் அமைக்க இடம் கிடைக்க வேண்டும். அறிக்கையில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 6 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அரசின் சுற்றறிக்கையில் 230/110/33 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இடம் கையகப்படுத்தப்பட்டு பின்னர்தான் துணை மின் நிலையம் அமைக்க முடியும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுதுகூட அதைத்தான் நான் சொன்னேன். இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. இப்பொழுது இடம் கிடைத்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அரசின் பல்வேறு துறைகளுக்கும் சென்று இடம் தேர்வு செய்த பின்னர்தான் பணிகளை ஆரம்பிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட 230 கே.வி. துணை மின் நிலையம் உறுதியாக அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி எனக்கும் தெரியும். நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக 6 மாதங்களுக்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று பேசினோம். இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன். இருப்பினும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. நிச்சயமாக, கூடியவிரைவிலே துணை மின் நிலையத்தின் திறப்பு விழாவை எதிர்ப்பார்க்கிறோம். நன்றி.*

(ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, அரசு கலைக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பான விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் உயர் கல்வி பயில, தேவையின் அடிப்படையில், தமிழக அரசால் 2011–2012 ஆம் கல்வியாண்டில், 11 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும்